**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலன் – தொழுநோயால் பாதிக்கப்பட்ட கூடுதலாக கண்டறியப்பட்டுள்ள 280 பயனாளிகளுக்கு 2014–15 ஆம் நிதியாண்டிற்கு பராமரிப்பு உதவித் தொகை வழங்குவது – ரூ.11,20,000/– நிதி ஒப்பளிப்பு செய்வது – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை (நிலை) எண்.06** **நாள் 22.01.2015**

**ஜய–தை 8, திருவள்ளுவர் ஆண்டு, 2046**

**படிக்க :**

1. அரசாணை (நிலை) எண்.124, மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை, நாள் 24.12.2012.
2. அரசாணை (நிலை) எண்.66, மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.2) துறை, நாள் 12.07.2013.
3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் ந.க.எண்.484/ம.இ.நிர்–3/2014, நாள் 16/10/2014.

---

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், தொழுநோயால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு, பராமரிப்பு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், தொழுநோயால் பாதிக்கப்பட்ட 6161 நபர்களுக்கு மாதம் ரூ.1,000/– என்ற வீதத்தில், 2012–2013 ஆம் நிதியாண்டில் டிசம்பர் 2012 முதல் மார்ச் 2013 வரையிலான நான்கு மாதங்களுக்கு பராமரிப்பு உதவித் தொகை வழங்க ரூ.2,58,82,370/–ஐ சில நிபந்தனைகளுக்குட்பட்டு நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில், தொழுநோயால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு பராமரிப்பு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், 2013–2014 ஆம் நிதியாண்டிலிருந்து இத்திட்டத்திற்கான வரவு–செலவு திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகைக்குள், ஏற்கனவே பயன்பெறும் பயனாளிகளுக்கு, மாவட்ட மாற்றுத் திறனாளிகள் அலுவலர் மூலமாக ஒவ்வொரு மாதமும் மைய வங்கி முறையின் (Core Banking System) கீழ் பராமரிப்பு உதவித் தொகை வழங்க, முதன்மைச் செயலாளர் / மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி வழங்கியும், மேலும், இத்திட்டத்தின் கீழ் ஏற்கனவே பயன்பெறும் பயனாளிகளுடன், கூடுதல் பயனாளிகள் கண்டறியப்பட்டு அவர்களுக்கும் சேர்த்து பராமரிப்பு உதவித் தொகை வழங்க வரவு–செலவு திட்டத்திற்கும் மேலாக கூடுதல் நிதி ஒதுக்கீடு தேவைப்படின், அதற்குரிய கருத்துருவினை அரசிற்கு அனுப்பி வைக்குமாறும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றில் காணும் கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், 2014–2015 ஆம் நிதியாண்டில், 5,000 பயனாளிகள் பயன்பெறும் வகையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.6,00,00,000/– (ரூபாய் ஆறு கோடி மட்டும்) மாவட்டங்களுக்கு பிரித்து வழங்கப்பட்டதாகத் தெரிவித்து, மேலும் இந்நிதியாண்டில் கூடுதலாக கண்டறியப்பட்டுள்ள 280 தொழுநோயாளிகளுக்கு பராமரிப்பு உதவித் தொகை, டிசம்பர் 2014 முதல் மார்ச் 2015 வரையிலான நான்கு (4) மாதங்களுக்கு வழங்கிட ஏதுவாக, ரூ.11,20,000/– நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வழங்குமாறு அரசினைக் கோரியுள்ளார்.

4. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை நன்கு பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று, 2014–15 ஆம் நிதியாண்டில், கூடுதலாக கண்டறியப்பட்டுள்ள 280 தொழுநோயாளிகளுக்கு, பராமரிப்பு உதவித் தொகையாக மாதம் ஒன்றுக்கு ரூ.1,000/– என்ற வீதத்தில்,

**[த.பி.பா]**

டிசம்பர் 2014 முதல் மார்ச் 2015 வரையிலான 4 மாதங்களுக்கு, மின்னணு தீர்வு சேவையின் (Electronic Clearing Service (ECS)) மூலம் பராமரிப்பு உதவித் தொகை வழங்க ஏதுவாக ரூ.11,20,000/– (ரூபாய் பதினொன்று இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும், மேலும் இச்செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி அளித்தும் அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி–3ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினம் கீழ்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

**“2235–சமூக பாதுகாப்பும் நலனும் – 02–சமூக நலன் – 104–முதியோர், இயலாமையுற்றோர் மற்றும் ஆதரவற்றோர் நலன் – II-திட்டத்தில் சேராதது – பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்ட பணிகள் – KQ–தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பராமரிப்பு உதவித் தொகை – 09–உதவித் தொகை – 03–குறிப்பிட்டத் திட்டங்களுக்கான உதவித் தொகை. (து.தொ.கு. 2235 02 104 KQ 0938)’’.**

6. மேலே பத்தி–3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்திற்கு தேவையான நிதியொதுக்கம் 2014–2015 ஆம் ஆண்டிற்கான இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். 2014–15 இறுதி திருத்த நிதியொதுக்கத்தில், மேற்படி நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதை எதிர்நோக்கி, இச்செலவினத்தை மேற்கொள்ள, மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் அனுமதிக்கப்படுகிறார். இருப்பினும் மேற்கண்ட செலவினத்திற்கு, 2014–15 ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் கொணர்ந்து சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேலும், இச்செலவினத்தை தவறாமல் 2014–2015 ஆம் ஆண்டிற்கான துணை மானிய கோரிக்கை இறுதி திருத்த நிதியொதுக்கத்திற்கான கருத்துருவை நிதித் (சந/வ.செ.பொது–II) துறைக்கு சேர்த்து அனுப்பும்படி மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

7. இவ்வரசாணை நிதித் துறையின் அலுவல் சாரா எண்.1657/நிதி(சந)/2015, நாள் 20.01.2015 மற்றும் கூடுதல் நிதி ஒதுக்க பேரேடு எண்.2227 (இரண்டாயிரத்து இருநூற்று இருபத்தேழு)–ன் ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பொ. சிவசங்கரன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்**
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.
அனைத்து அரசு மறுவாழ்வு இல்லங்கள்.
(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டம்) அவர்களின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
**நகல்**
நிதித் (சந)/(வ.செ.பொது.I)/(வ.செ.பொது.II) துறை, சென்னை–9.
இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை–9.
உதிரி நகல் / இருப்பு கோப்பு.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.